**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.10 |
| Name | : | திரு.கணேசன் |
| Father's /Husband Name | : | கோவிந்தசாமி |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 58 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 7th day of October 2025.
A2 present. A1 absent. petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2025 ம் தேதி குடவாசல் காவல் நிலைய பொறுப்பிலிருந்த தலைமைக்காவலர் திரு.சாமிநாதன் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பட்ட தகவலைப் பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த சௌமியா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி அதற்கு மனு எண்.96/2025 எனக் கொடுத்து கடந்த 28.02.2025 ம் தேதி குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.72/2025, ச.பி.296(பி), 115(2), 351(1) BNS மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று- சாட்சிகள் திரு.வீராச்சாமி, திரு.ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் இவ்வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வந்தேன். **அதற்கான பார்வை மகசர் அ.சா.ஆ 5. மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 குறியீடு**

**செய்யப்படுகிறது .** பின்பு சாட்சிகள் சௌமியா, சுமித்ரா, ஜேம்ஸ், பிரபாகரன்,வீராச்சாமி, ராமலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் இருவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் இவ்வழக்கில் கைது செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் காயமுற்ற அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் பிரபா, விக்னேஷ்வரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கினை பதிவு செய்த சாமிநாதன் என்பவரை விசாரித்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**சம்பவம் நடந்ததிலிருந்து 6 தினங்கள் காலதாமதமாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.** 6 நாள் காலதாமதத்திற்கு காரணம் குறித்து நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மனு ரசீது செய்து கொடுத்தேன். பொதுவாக மனு ரசீது கொடுத்தால் யார் யாரை விசாரித்தார்கள் என்று பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் விசாரணை செய்த விபரங்களையும் பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நாட்குறிப்பேட்டின் அசலையோ, நகலையோ நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையுடன் சேர்த்து அந்த குறிப்பேடை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த 6 நாட்கள் காலதாமதமானது எதிரிகள் மீது பொய்யான வழக்கினை ஜோடிப்பதற்காக காலதாமதம் என்றால் சரியல்ல. களவிசாரணை எதுவும் மேற்கொள்ளாததால் தான் நீதிமன்றத்தில் குறிப்பேடை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு நான் தான் சென்று விசாரணை செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகளில் கண்ணுற்ற சாட்சிகளாக புகார்தாரரின் தகப்பனாரையும் தாயாரையும் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவர்களைத்தவிர

தெருவில் உள்ள வேறு நபர்களை சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகளின் நபர்களை இந்த வழக்கில் விசாரித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் தான் குடும்ப நபர்களை மட்டும் கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்று எவ்வித விசாரணையும் செய்யாததால் தான் மேற்படி நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் ஜேம்ஸ் என்பவரின் கொல்லையில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜேம்ஸ் என்பவரின் கொல்லையை சுற்றி வேலி இருந்ததாகவும் அதனை பிரித்து சேதப்படுத்தியது தொடர்பாகத்தான் பிரச்சனை ஏற்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலி பிரித்து சேதப்படுத்தியதாக சொல்லப்படும் இடத்தை நான் புகைப்படம் ஏதேனும் எடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. மாதிரி வரைபடத்தில் ஜேம்ஸ் வீட்டை சுற்றி வேலி அடைப்பு இருப்பதாக குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள இடம் ஜேம்ஸ் வீட்டிற்கு கொல்லையில் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சியில் இரண்டாவது நபராக இளங்கோவன் என்பவர் கையொப்பம் செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் ஜோடிக்கபட்டது என்றாலும் சரியல்ல. வழக்கில் புகாரில் கிழித்ததாக சொல்லப்படும் பாவாடையை குறித்து விசாரணை செய்து அதை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அது போன்ற நிகழ்வு நடக்கவில்லை என்றாலும் அதனால் தான் அதனை தடய பொருளாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் கதவை உடைத்து வந்தார்கள் எனவும் எதிரிகள் அசிங்கமாக திட்டியதால் அவருக்கு அவமானம் ஏற்பட்டதாகவும் எதிரிகள் பாவாடையை அவிழ்த்துவிட்டதால் அவருக்கு அசிங்கமும் அவமானமும் ஏற்பட்டதாகவும் மீண்டும் அந்த ஊருக்குள் வருவதற்கு அவமானம் ஏற்பட்டதாகவும் எதிரிக்ள மிரட்டியதால் அவர்கள் வீட்டிற்கு வருவதற்கே

பயம் ஏற்பட்டதாகவும் எதிரி மார்பில் குத்தியதால் வலி ஏற்பட்டதாகவும் எனது விசாரணையில் அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. கடந்த 23.02.2022 ம் தேதி 15.30 மணிக்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து அ.சா.1 புகார் அளித்தாரா என்றால் கொடுத்தார்கள். அதனை பொறுத்து மனு ரசீது வழங்கப்பட்டது. 23.02.2022 ம் தேதி 05.00 மணிக்கு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் அப்பா சுந்தர் என்பவரிடம் வேலை செய்து வருகிறார் என்ற விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சுந்தர் என்பவரது வேலியை பிரித்தது தொடர்பாகத்தான் பிரச்சனை ஏற்பட்டது என்ற விபத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சுந்தர் என்பவரின் தூண்டுதலின் பேரில் பொய் புகார் கொடுக்கப்பட்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும்,நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கினை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிகள் அ.சா.1 ஐ திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை எந்த அவமானமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.07 16:23:43 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.